LIBRARY
25 NOV 1968
STATE LEGISLATURE, MADRAS

தமிழக சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1968 மார்ச்1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தமிழகத்தில் நிலக்கரி கண்டுபிடிப்பு.

*** 110. வினா :—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்தில் நிலக்கரி எங்கெங்கு கிடைக்கின்றது ?

(இ) மேற்கொண்டு கிடைக்கும் இடங்களை ஆய்வு செய்ய அரசு முயன்று வருகின்றதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி அருகில் சில இடங்களிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொளத்தூரிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் அருகில் கட்டவாக்கத்திலும் நிலக்கரி கிடைப்பதாக அறிவிக்கப்பட்டதை யொட்டி மாநில நில உட்கூற்றியல் பிரிவு ஆய்வு செய்தது. இவ்வாய்வின் முடிவுகள் ஊக்க மூட்டுவனவாக இல்லை. இம் மாநிலத்தில் வேறெங்கும் நிலக்கரி கிடைப்பதில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இதற்கான செலவை மத்திய அரசு செய்கிறதா அல்லது, மாநில அரசு செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதை மத்திய அரசும் அகழ்ந்து காணுகிறது. மாநில அரசும் அகழ்ந்து காணுகிறது. சில வேளைகளில் இரண்டு அரசுமே சேர்ந்து அகழ்ந்து காணுகின்றன. அவற்றைப் பொறுத்து இந்த அரசு மேற்கொண்டவை பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. க. மு. ராசகோபால் : செங்கல்பட்டு மாவட்டத்தில் கட்டவாக்கம் பகுதியிலே நிலக்கரி இருப்பதாக ஆராய்ச்சியாளர் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது உபயோகிக்கக் கூடிய கரியாக இருக்கிறதா அல்லது தேவையற்ற கரியாக இருக்கிறதா ? இப்போது அதைநிறுத்தியிருக்கிறார்கள். அதற்கான காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கரி கிடைக்கிறது என்பதாக எடுத்துச் சொல்லி அகழ்ந்து காணப்பட்ட வகையில் நிலக்கரி கிடைக்கிற தன்மை எதுவும் ஏற்படவில்லை. நம்முடைய மாநிலத்திலே “ கோல் ” என்று சொல்வது கிடைக்கவில்லை. “ லிக்னைட் ” என்பதுதான் நெய்வேலியில் 100 சதுரமைல் பரப்பில் 200 கோடி டன் “ லிக்னைட் ” கிடைக்கும் என்று சொல்லப்பட்டு, அதை வெட்டியெடுக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். இங்கு “ கோல் ” கிடைக்கவில்லை, கரிசல் மண் போன்றவைதான் இருக்கிறதே தவிர ஊக்கம் ஊட்டக் கூடிய அளவில் இல்லை என்ற விவரம்தான் இருக்கிறது. அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை.

திரு. முனு. ஆதி : காஞ்சீபுரத்தில் தரம் உள்ள முதல்தரமான நிலக்கரி கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை நல்ல முறையிலே சர்க்கார் பயன்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அகழ்ந்து கண்டவர்களே அப்படி நிலக்கரி அங்கே இல்லே என்று சொல்கிருர்கள். நிலக்கரியே அங்கு கிடைக்காத போது, தரம் உள்ள நிலக்கரியா அல்லது வெட்டி யெடுக்கப்படுமா என்பதுபற்றிய கேள்விக்கு இடமே இல்லே.

திரு. கே. விநுயகம் : நமது தமிழகத்திலே என்ன கிடைக்க வில்லே ? தட்டிஞல் தங்கம், வெட்டிஞல் வெள்ளி, இடித்தால் இரும்பு என்று சொல்லப்பட்டதே அந்த முறையில் ஜெனரல் ஜியலாஜிகல் சர்வே செய்ய எக்ஸ்பர்ட்டுகளேப் போட்டு, நாடு முழுவதும் சர்வே செய்து, முன்பு சொன்னது உண்மையா என்று ஆராய்ச்சி செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலேவர் அவர்களே, நிலக்கூறு வல்லுநர்களும், ஆராய்ச்சியாளரும் ஆய்ந்து அறிந்து எங்கெங்கே தங்கம் கிடைக்கிறது, எங்கெங்கே வெள்ளி கிடைக்கிறது, எங்கெங்கே தாமிரம் கிடைக்கிறது என்று சொல்லுகிற இடத்தில் தட்டிஞல் தங்கம் கிடைக்கும், வெட்டிஞல் வெள்ளி கிடைக்கும், தோண்டிஞல் தாமிரம் கிடைக்கும். அவர்கள் சொல்லியும் தோண்டப்படாத காரணத் தாலேதான் ஏன் கிடைக்கவில்லே என்று சொல்லப்பட்டதே தவிர வேறில்லே. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியபடி தமிழகம் முழுவதும் மாநில அரசு நிலக்கூறு வல்லுநர்களும், மத்திய அரசைச் சேர்ந்த நிலக்கூறு வல்லுநர்களும் சேர்ந்து இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடி கலந்து பேசி இருவரும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்குகிற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. பழனிக்கு அருகாமையிலே பாக்சைட் கிடைக்கின்ற தன்மையிலே, அதை அகழ்ந்து காணுகிற தன்மை யிலே ஈடுபட்டிருக்கிருர்கள். மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து தமிழகம் முழுவதும் ஆராய்ச்சி செய்து கொண்டுவருகிருர்கள். ஆகையால் திட்டவட்டமாக ஆராய்ந்ததற்குப் பிறகுதான் அதன்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலேவர் அவர்களே, நெய்வேலியில் இரண்டாவது மைன் கட்டுக்காக திட்டங்கள் தயார் செய்யப்பட்டும், நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டும், அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அங்கே யிருந்து இன்னும் அனுமதி தரப்படவில்லே. நெய்வேலியில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும், பொறியியல் வல்லுநர்களும் வேலே யிழந்து விடக் கூடிய நிலேயிருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது மைன் கட்டு ஆரம்பிப்பதைப் பொறுத்துதான் சேலம் உருக்காலே உருவாகும் என்பதாலும், இந்திய சர்க்காரில் இது ஐந்தாண்டு காலமாக தூங்கிக் கொண்டிருப்பதாலும், அதைத் தட்டிக் கேட்பதற்கு தமிழக சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இரண்டாவது சுரங்கம் தோண்டி அதிலிருந்து நிலக்கரி எடுக்கவேண்டுமென்ற திட்டம் இந்திய அரசால் தீட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அளவிலே அதிலிருந்து கிடைக்கக்கூடிய பலன் முழுவதும் பயன்படுத்தக்கூடிய நிலேமை இருக்க வேண்டுமென்று சொல்லுகிருர்கள். இது அனல் மின்சாரத்திற்காகப் பயன்படும், இது பிரிக்கட்டுக்காகப் பயன்படும், இது பர்டிலேசருக்குகாகப் பயன்படும் என்பதைப்ப்றறிய ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிருர்கள். மேலும் மின்சாரத்திற்குப் பயன்படக் கூடிய சூழ்நிலே இருக்கிறதா என்று பார்க்கிரும். பர்டிலேசருக்காகப் பயன்படுத்த முடியுமா என்பதையும் பார்க்கிரும். மற்ருெரு சரங்கம் வெட்டியெடுப்பதன் மூலமாக பயன் படுத்தலாம் என்ற யோசனே சொல்லியிருக்கிருர்கள். ஆனுல் இதைப் பற்றி மத்திய அரசைக் கேட்டபோது, தேவையைப் பொறுத்துத்தான் வெட்ட வேண்டியிருக்கும். தேவை அதிகம் ஆகும் போது அந்த முயற்சி

மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். இது வரை சுரங்கத்தில் இருக்கின்ற நிலக்கரியைப் பயன் படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். எப்படி மேற்கொள்வது என்பது அவர்கள் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : காரைக்குடிக்கும் சிவகங்கைக்கும் இடையிலே ஏராளமாக நிலக்கரி இருப்பதாக ஆராய்ச்சி செய்தார்களே அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : இருப்பதாக ஆராய்ச்சி செய்யப்பட்டு, அந்த ஆராய்ச்சியின் முடிவு ஊக்கம் ஊட்டுவதாக இல்லை என்ற தகவலை கூறியிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அமைச்சர் அவர்கள், பழனிக்கு அருகாமையில் பாக்சைட் இருப்பதாகச் சொன்னார்கள். ஆகையால் அங்கே ஒரு ஆலையை நிறுவுவதற்காக பரிசீலனை செய்து ஆலை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அங்கு எவ்வளவு கிடைக்கும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சேலத்திலுள்ள பாக்சைட்டைப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலை தவிர வேறு ஆலை ஏற்படுவதற்கு தக்க அளவில் பாக்சைட் கிடைக்கிறதா என்று பார்த்து முடிவு தெரிந்ததற்குப் பிறகுதான் இதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி : திருச்சி மாவட்டத்திலுள்ள குளத்தூரில் ஏராளமான நிலக்கரி கிடைக்கிறது என்று தனிப்பட்ட ஒருவர் அதைத் தோண்டுவதற்காக மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. நம்முடைய சர்க்கார் அதற்கு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : முதலிலே குளத்தூர் என்ற இடத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்ட போது அது ஊக்கம் ஊட்டுவதாக இல்லை. இங்கு நிலக்கரி கிடைக்கிறது என்ற நிலைமை இருந்தால்தான் இதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். அடிப்படையே சரியாக யில்லாதபோது கட்டடம் எழுப்புவது என்பது இயலாது.

திரு. பி. வேலுசாமி : நீலகிரி மாவட்டத்தில் தங்கம் கிடைப்பதாகச் சொல்லுகிறார்களே, அதை எடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லையென்றாலும் பதில் சொல்லுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் தங்கம் கிடைக்கிறது என்று தெரிகிறது. ஆனால் ஆராய்ச்சி செய்யும் போது, அதில் கிடைக்கும் தங்கத்தை விட செலவு அதிகமாகும் என்ற காரணத்தாலும், அதிக பலன் கிடைக்காது என்ற நிலைமை இருப்பதாலும் முயற்சி எடுக்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது தொட்டால் தங்கம் கிடைக்கும், வெட்டினால் வெள்ளி கிடைக்கும் என்று சொல்லி வெட்டவில்லை வெட்டினால் கிடைக்கும் என்று சொன்னார்கள் எந்தப் பகுதியிலே தங்கம் கிடைக்கும், எந்தப் பகுதியிலே வெள்ளி கிடைக்கும் என்று யாரால் எப்பபோது சொல்லப்பட்டது ? அதை நிறைவேற்றுவதற்கு இந்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பழமொழி சொல்வது போன்றுதான் எடுத்துசொல்லப்பட்டது. சேலத்தில் இரும்புகிடைக்கும் என்று சொன்னார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை. சில இடங்களில்

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டன. நிலக்கூறு வல்லுநர்கள் எந்த இடத்தில் வெட்டினால் கிடைக்கும் என்று சொல்லுகிறார்களோ, அந்த இடத்தில் வெட்டவேண்டும். பொன்மலையை எடுத்துக்கொண்டால் அங்கு பொன்மலை என்று பெயர் இருப்பதனாலேயே அங்கு வெட்டினால் பொன் கிடைக்காது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இனிமேல் அடுப்புக்கு விறகே எரிக்க வேண்டியது இல்லை; இந்த லிக்னைட்டைக் கொண்டே மிகக் குறைந்த விலையிலேயே ஏழைகள் பலன் அடைய முடியும்; அதே போன்று இனிமேல் பட்டிதொட்டிகளில் எல்லாம் மணல் ரோடோ, மெட்டல் ரோடோ கிடையாது, தார் ரோடுதான் போடப் போகிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்குப் போதுமான அளவுக்கு வசதி வாய்ப்பு இருந்தும் அதை அபிவிருத்தி செய்யாததற்கு......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியை சுருக்கமாகப் போடுங்கள். நீங்கள் பேசிக் கொண்டே இருக்காதீர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதை அபிவிருத்தி செய்யாததற்குக் காரணம் சேலம் உருக்காலை ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்தக் கூடிய காரணத்தினால் அதற்கு வேண்டித் தான், போதுமான அளவுக்கு லிக்னைட் கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக வேண்டி அது ஸ்தம்பிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைக் குறித்து என்ன நிலைமை என்று கூறுவதற்கில்லை. ஆனால் உற்பத்தித் திறனை விரைவுபடுத்துவதற்கும், அதிகப்படுத்துவதற்குமான முயற்சியிலே இப்பொழுது நெய்வேலியில் உள்ள லிக்னைட் கார்ப்பரேஷன் ஈட்டுபட்டிருக்கிறது. சேலத்தில் இரும்பு உருக்கு தொழிற்சாலை வைக்கப்படும் என்ற நிலைமை இருந்தால், அதிகமாக வெட்டி எடுக்க வேண்டிய நிலைமை வரும். அப்படி வெட்டி எடுக்கும் நிலை வரும்போது இரண்டாவது "மைன்கட்" தொடங்க வேண்டிய அவசியம் ஏற்படும். இப்பொழுது பிரிக்கெட்டுக்கு கிராக்கி ஏற்பட்டிருப்பதால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான முயற்சிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது வெட்டி எடுக்கின்றதை இந்தஅளவுக்கு அதிகப்படுத்தலாம்என்றால், அதிகப்படுத்துகின்ற மெஷின்கள் ஒன்றிரண்டு பழுதுபட்டதன் காரணமாக இடையிலே வெட்டி எடுக்கப்பட்டது குறைந்தது என்றும், மீண்டும் விரைவுபடுத்தப்படும் என்றும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனிடமிருந்து பதில் வந்திருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் கொதுமலை என்ற மலையில் தங்கம் இருப்பதாக பல வருடங்களாக சொல்லப்படுகிறதே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நிலக்கரியைப் பற்றியது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நிலக்கரியின் தேவை இன்று மிக முக்கியமானதாக நாட்டின் முன்னால் இருக்கும்போது தமிழகத்திலே ஆயிரக்கணக்கான இன்ஜினீயர்கள், டெக்னீஷியன்கள், தொழிலாளர்கள்,வேலை இழக்கும்படியான நிலை நெய்வேலியில் ஏற்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் ஏற்கனவே அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட காலத்தில் உரியஆராய்ச்சியோடு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இன்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அது பற்றி மத்திய அரசாங்கத்தோடு கலந்து நம்முடைய மாநில அரசும் ஒரு குழு அமைத்து இந்த திட்டத்தை இன்னும் உற்பத்தி பெருகும் முறையில், தமிழகத்திற்கு உபயோகப்படக்கூடிய முறையில் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மத்திய அரசினுடைய மேற்பார்வை யின்கீழ் இருந்து வருகிற ஒன்று. மாநில அரசாங்கத்தின் கீழ் இருந்து வருகிற ஒன்றல்ல. ஆகவே, நம்முடைய தேவையைக் கேட்கவும் நம் தேவையை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கேட்கக் கூடிய அளவுக்குத் தான் மாநில அரசு அதோடு தொடர்பு கொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினர் எடுத்துத் தெரிவித்த கருத்தினைப் பற்றி முடிவு செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் மத்திய அரசைத்தான் சார்ந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் நெய்வேலியில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதில் இது வரை எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா ? தமிழகத்தில் வேறு எங்கும் நெய்வேலி யிலுள்ளதுபோல் பழுப்பு நிலக்கரி இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டிருக் கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஆரம்பத்தில் நிபுணர்களுடைய குத்து மதிப்பான நிர்ணய அடிப்படையில் 200 கோடி டன் என்று இருக்கிறது. எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்பது பற்றி அவர்களிடத்தில்தான் கேட்கவேண்டும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் வாங்கி தரமுடியும். இப்பொழுது நெய்வேலியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் தான் கிடைப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. வேறு எங்கும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

Tamil in District Administration.

***111 *Q*.—THIRU K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) Whether at the recent Conference at Tiruchirappalli the Collectors have expressed enthusiasm about the implementation of the use of Tamil as Official Language in the district administration ; and

(*b*) if so, the action taken thereon ?

மாபுண்மிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் பொதுவான கருத்துக் களைத் தெரிவித்தார்கள். அவற்றின் மீது நடவடிக்கை எதுவும் தேவைப் படவில்லை.

திரு. கே. விநயகம் : மாவட்ட ஆட்சியிலே அவர்கள் அனுப்புகிற கடிதங்கள், அல்லது நாம் போடுகிற மனுக்கள் தமிழிலேயே இருந்தால் நல்லது என்று அவர்கள் கருத்து தெரிவித்திருந்தும் கூட, அங்கு நடக்கிற வழக்குகள், அவர்களுடைய "லெவலிலே" நடக்கிற வழக்கு களுக்கு—எங்களுக்கு—வக்கீல்களுக்கு வருகிற "சம்மன்ஸ்" நாங்கள் கொடுக்கிறபதில், பிறகு வருகிற ரிப்ளை இவைகள் எல்லாம் ஆங்கிலத்தில், தான் இன்னும் நடைமுறையில் இருக்கின்றன. அவற்றையும் தமிழிலேயே திருத்தியமைப்பதற்கு அவர்களுக்கு உத்தரவு அரசாங்கம் போடமுடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு நான்கு கட்டங்கள் வைத்திருக் கிறார்கள். முதல் கட்டம் தமிழிலேயே விண்ணப்பங்கள் மற்றவைகள் எழுதுவார்களானால், அதற்குப் பதில் அனுப்புவது தமிழிலே தான் இருக்க வேண்டுமென்பது. அடுத்த கட்டம், ஒரு அலுவலகத்திற்கும் மற்றொரு அலுவலகத்திற்கும் தொடர்பு கொள்ளுகின்ற பொழுது, அந்த கடிதங்கள் தமிழில் இருக்க வேண்டுமென்பது. மூன்றாவது கட்டம்,